வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 6183/ஆ4/ 2025 நாள் . 12.12.2025

பொருள் : தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் தேர்வு (NMMS) ஜனவரி –2026– அரசு பள்ளிகள் / அரசு உதவிபெறும் பள்ளிகள் /மாநகராட்சி /நகராட்சி /ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிபுதவித் தொகைத் தேர்வு தொடர்பான அறிவுரைகள் வழங்குதல் –சார்பாக

பார்வை : சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ... 013364 / டி (3.) / 2025 நாள். 12.12.2025

==============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதப்படி, 10.01.2026 (சனிக்கிழமை ) அன்று நடைபெறவுள்ள தேசிய வருவாய் வழி மற்றும் தகுதி படிப்புதவித் தொகைத் (NMMS) தேர்விற்கு விண்ணப்பிக்க விரும்பும் அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள்/ மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் எட்டாம் வகுப்பு பயிலும் மாணவர்கள், சம்பந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மூலம் இணையதளம் வாயிலாக விண்ணப்பப் படிவங்களை 12.12.2025 முதல் 15.12.2025–க்குள் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து தலைமை ஆசிரியர்களிடம் 20.12.2025 –க்குள் ஒப்படைக்க வேண்டும் என தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்குமாறு மாவட்டக் கல்வி அலுவலருக்கு (இடைநிலை /தொடக்கக்கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இத்துடன் இணைத்தனுப்பப்படும் அறிவிப்பினையும், பின்பற்றி செயல்பட அனைத்து அரசு பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகள் / மாநகராட்சி / நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு
1. அறிவிப்பு
2. விண்ணப்ப படிவம்

//ஒம். //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுர்
1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை)வேலூர் தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி)வேலூர் தகவலுக்காகவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்

நகல் :

அனைத்து அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் / மாநகராட்சி/நகராட்சி / ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள், வேலூர் மாவட்டம்.